[1979 ஏப்ரல் 21

திரு. எம். ஏ. ஜெயவேலு (அமைச்சரின் பேரவைச் செயலர்) : சீர்திருத்தம் செய்வதற்காக ஒரு குழு அமைக்கப் பட்டு அது ஒரு அறிக்கையை அரசுக்கு சமர்ப்பித்திருக்கிறது. இந்தக் குழு சிறைச்சாலைகளில் உள்ள குறைகளையும் ஆராய்ந்திருக்கும் என்று நம்புகிறேன். கூடுமான வரை பல வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. சில நேரங்களில் தவிர்க்க முடியாத நிலையில் பல பேர்களைக் கைது செய்யும்போது, சில சிக்கல்கள் ஏற்படுகின்றன. அப்போது உடனடியாகக் கைது செய்பவர்களை மத்திய சிறைச்சாலைக்கு அனுப்பிவிடுகிறார்கள்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கிளைச் சிறைச் சாலைகளில் லாட்ரீன் அமைத்துக் கொடுக்க செயற்குறிப்பு இருப்பதாக சொன்னார்கள். இதன்படி நிறைவேற்றவேண்டும் என்றால் 10, 15 ஆண்டுகள் ஆகும். ஆகவே சீக்கிரமாக இந்த லாட்ரீன்களை ஏற்படுத்திக் கொடுக்க அரசு முன்வருமா ? மேலும் கைதிகளிடம் சீலைப் பேன் என்பது மிகவும் மோசமாக இருக்கிறது. இது எல்லா கைதிகளிடமும் பரவி விடுகிறது. இதையும் உடனடியாக போக்கு வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ?

திரு. எம். ஏ. ஜெயவேலு (அமைச்சரின் பேரவைச் செயலர்) : பெரும்பாலும் உள்ள கிளைச் சிறைச்சாலைகளில் இந்த நவீன வசதிகள் பிளஷ் அவுட் வசதி ஏற்படுத்தப்பட்டிருக் கிறது, மேலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிற சீலைப்பேனைப்பற்றி அரசுக்குத் தகவல்வரவில்லை. இருந்தாலும் அதுபற்றி ஆராயும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

Vellore Court buildings.

* Q. No. 757 Thiru R. MARGABANDU ; Will the Hon. the Minister for Law be pleased to state the present stage of the proposal to shift the Court buildings from Vellore Town Fort to Sathuvacheri Housing area ?

திரு. எம். ஏ. ஜெயவேலு: (அமைச்சரின் பேரவைச் செயலர்): இச்செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

Thiru P. CHANDRAN : I want to know from the Hon. Parliamentary Secretary to the Hon. Minister for Law if the Government would come forward to construct Chambers for the Advocates practising there, as we do in the High Court, since Sathuvacheri is far away from the Vellore Town Fort.

திரு. எம். ஏ. ஜெயவேலு : (அமைச்சரின் பேரவைச் செயலர்) : தலைவர் அவர்களே, நமது உயர்நீதிமன்றம் இந்த மாவட்ட நீதிமன்றத்தை சத்துவாச்சேரி பகுதியில் ஏற்படுத்த

1979 ஏப்ரல் 21]

கட்டிடங்களைக் கட்டிக்கொடுக்குமாறு வீட்டுவசதி வாரியத்தைக் கேட்டுக்கொண்டது. வீட்டு வசதி வாரியம் இதற்காக நிலம் ஒதுக்கியது. நீதிமன்ற கட்டிடங்களைக் கட்டுவதற்கு முதலில் வீட்டுவசதி வாரியம் அறிவித்த தொகை 1.04 இலட்சம். தற்போது 9.30 லட்சம் ரூபாய் தரவேண்டும் என்று கேட்கிறது. மேலும் இந்தத் தொகையைக் கட்டவில்லையென்றால் அதற்குரிய வட்டியை வசூலிக்க நேரிடும் என்று வீட்டு வசதி வாரியம் தெரிவித்து இருக்கிறது. ஆகவே இதுபற்றி நீதிமன்றம் வீட்டு வசதி வாரியத்தோடு தொடர்பு கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை நகரில் சாலை ஓரங்களில் கடைகள்.

* வினா எண். 758—திரு. சென்னை மு. அரங்கநாதன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னை மூர்மார்க்கட் சுற்றியுள்ள சாலைகளிலும், சென்னை தொலைபேசி நிலையத்திற்கும் — பூக்கடைக்கும் இடையிலுள்ள/ சாலையிலும் போடப்பட்டுள்ள கடைகள் அனைத்தும் மாநகராட்சியின் அனுமதியின் பேரில் போடப்பட்டதா?

(ஆ) ஆம் எனில் மாத வாடகை எவ்வளவு? யாரால் வசூலிக்கப்படுகிறது?

மாண்புமிகு திரு கா. காளிமுத்து : (அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. கா. அப்புனு கவுண்டர் : தலைவரவர்களே, நடைபாதைகளில் அதிகமான கடைகளை வைத்துவிடுவதால் பாதசாரிகள் நடைபாதைகளில் நடந்து போவதற்கு பெரும் தொல்லையாக இருக்கிறது. இதை அரசு உணர்ந்து இந்த நடைபாதை கடைகளை அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : நடை பாதைகளில் உள்ள கடைகளினால் போக்குவரத்து இடையூறு இருக்கிறது என்பதை அரசு உணர்ந்திருக்கிறது என்றாலும் இதில் வியாபாரம் செய்கின்றவர்களுடைய நிலைமையில் மனிதாபிமான உணர்வோடு இரக்கம் காட்ட வேண்டும் என்ற நிலைமையில், இந்த நடைபாதை கடை வியாபாரிகளே ஒரு முறையோடு கடைகளை வைத்துக்கொள்ள வேண்டும் என்றும், அதைப்பற்றி ஆலோசித்து முறையாக அமைத்துக் கொடுப்பதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டது. மாநகர ஆட்சி தனி அதிகாரி, ஆணையாளர், பெருநகர் வளர்ச்சி மன்ற அதிகாரி, போலீஸ்